# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோவில் அருகில்),எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை-600 018. தொலைபேசி எண்.243447590

**ஆணை நாள் 27.09.2019**

விசாரணை நடைபெற்ற இடம் : மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
விருதுநகர் மாவட்டம். விருதுநகர்

**முன்னிலை**

**திரு.இரா.தட்சிணாமூர்த்தி, பி.எஸ்ஸி., பி.எல்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 3975/SCIC/2019**

| | | |
|---|---|---|
| திரு. R. ராஜ்குமார்.<br>345, நடுத்தெரு, இராமசாமியாபுரம்,<br>கூமாபட்டி 626 133 வத்திராயிருப்பு<br>விருதுநகர் மாவட்டம். | .. | மேல்முறையீட்டாளர் |

/எதிர்

| | | |
|---|---|---|
| பொதுத் தகவல் அலுவலர்/<br>வன உயிரினக்காப்பாளர் அலுவலகம்,<br>சாம்பல் நிற அணில் வன உயிரினச் சரணாலயம்,<br>திருவில்லிபுத்தூர், விருதுநகர் மாவட்டம் | .. | பொது அதிகார அமைப்பு |

**ஆணை**

இவ்வழக்கில் இவ்வாணையத்தால் இன்று (27.09.2019) விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடத்தப்பட்ட முகாம் விசாரணைக்கு மனுதாரர் திரு. R. ராஜ்குமார் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு வே. அல்லிராஜ், உதவி வனப் பாதுகாவலர் மற்றும் வன விரிவாக்க அலுவலர், வன உயிரினக்காப்பாளர் அலுவலகம், சாம்பல் நிற அணில் வன உயிரினச் சரணாலயம், திருவில்லிபுத்தூர், விருதுநகர் மாவட்டம் ஆஜரானார்.

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் 10.12.2018 தேதியிட்டு பொது தகவல் அலுவலருக்கு தாக்கல் செய்துள்ள மனுவில், கடந்த 24.07.2018 மற்றும் 11.10.2018 ஆகிய தேதிகளில் தாணிப்பாறை முதல் சதுரகிரி வரை பணிபுரியும் வனத்துறை பணியாளர்கள் லஞ்சம் பெறுவது சம்பந்தமாக புகார் அளித்ததாக தெரிவித்து அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவரங்கள் வேண்டி 34 இனங்களில் தகவல்கள் கோரியுள்ளார். இதற்கு பொதுத் தகவல் அலுவலர் 08.01.2019 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக இனம் வாரியாக பதில் அளித்துள்ளார். இதன் பின்னர் பிரிவு 19(1)ன் கீழ் 21.01.2019 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக தான் 34 தகவல்கள் வேண்டி மனு செய்திருந்ததாகவும் அதில் வரிசை எண்.5,8,9 மற்றும் 34 ஆகியவற்றிற்கு பொதுத் தகவல் அலுவலரால் தகவல்கள் வழங்கப்படவில்லையென்று தெரிவித்து அதனை வழங்குமாறு தெரிவித்துள்ளார். இதற்கு மேல்முறையீட்டு அலுவலரால் 27.02.2019 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக பதில் மனுதாரருக்கு அனுப்பப்பட்டுள்ளது. திருப்தியடையாத மனுதாரர் பிரிவு 19(3)ன் கீழ் தனது 26.04.2019 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக ஆணையத்திற்கு தனது இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். அதன் பேரில் இன்று இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

3. இன்றைய விசாரணைக்கு ஆஜரான மனுதாரர் இனங்கள் 5,8,9 மற்றும் 34 ஆகியவற்றிற்கு தகவல்கள் வழங்கப்படவில்லையென்று தெரிவித்தார். மேலும் இனம் 5ல் தான் 09.12.2018 (ஞாயிற்றுக்கிழமை) அன்று சதுரகிரி கோவிலுக்குச் செல்ல பக்தர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டதா என்று கோரியிருந்ததாகவும் ஆனால் பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட பதிலில் இனம் 5க்கு 08.12.2018 அன்று அனுமதி வழங்கப்படவில்லையென்று தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் தான் கோரியது 09.12.2018 என்றும் தெரிவித்தார். இது குறித்து இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் இனம் 4 மற்றும் 5ல் மனுதாரர் முறையே 08.12.2018 மற்றும் 09.12.2018 ஆகிய தேதிகளில் சதுரகிரி கோவிலுக்கு செல்ல பக்தர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்று கோரியுள்ளார் என்றும் இதற்கு 08.12.2018 மற்றும் 08.12.2018 ஆகிய தேதிகளில் வனத்துறை சார்பில் அனுமதி ஏதும் வழங்கப்படவில்லையென்று பதில் அளிக்கப்பட்டுள்ளது என்றும் 09.12.2018 என்று குறிப்பிடுவதற்கு பதிலாக 08.12.2018 என்று தவறுதலாக குறிப்பிட்டதாகவும், மனுதாரர் கோரிய 08.12.2018 மற்றும் 09.12.2018 ஆகிய தேதிகளில் வனத்துறை சார்பில் கோவிலுக்கு செல்ல பக்தர்களுக்கு அனுமதி ஏதும் வழங்கப்படவில்லையென்று விசாரணையின்போது தெரிவித்தார். மேலும் இனங்கள் 8 மற்றும் 9ல் மனுதாரர் 08.12.2018 மற்றும் 09.12.2018 ஆகிய தேதிகளின் CCTV ன் புட்டேஜ் விவரங்களும் இனம் 34ல் CCTV கேமரா புட்டேஜ்களை பார்வையிட அனுமதிக்குமாறு கோரப்பட்டதாகவும் இது குறித்து தனக்கு தகவல்கள் முழுமையாக தகவல்கள் கிடைக்கவில்லையென்று தெரிவித்தார். இதற்கு இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் பாதுகாப்பு கருதி தனி நபருக்கு வழங்க இயலாது என்றும் CCTV விவரங்கள் தோராயமாக 16 நாட்கள் மட்டுமே பதிவுகள் சேமிக்கும் திறன் கொண்டதாக இருப்பதால் மனுதாரர் கோரும் புட்டேஜ் தற்போது இல்லையென்றும் தெரிவித்தார். இது குறித்து மனுதாரருக்கு ஏற்கனவே தெரிவிக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

4. மேற்கூறியவற்றை பரிசீலிக்கையில் இனம் 5க்கு பொது அதிகார அமைப்பால் தகவல் வழங்கப்பட்டுள்ளதை காண முடிகிறது. தாணிப்பாறையில் உள்ள CCTV கண்காணிப்பு கேமரா Unitல் அதிகபட்சம் 16 நாட்கள் மட்டுமே பதிவுகள் சேமிக்கும் திறன் கொண்டதாலும் மனுதாரர் கோரிய தகவல் அலுவலகத்தில் இல்லையென்பதாலும் அதனை வழங்க உத்தரவிட இயலாது. எனவே பொது அதிகார அமைப்பால் மனுதாரருக்கு வழங்கப்பட்ட பதில் முறையானது என்று கருதி இவ்வழக்கு இத்துடன் முற்றாக்கப்படுகிறது.

**ஓம்/- (இரா. தட்சிணாமூர்த்தி)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 3975/SCIC/2019</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
வன உயிரினக்காப்பாளர் அலுவலகம்,
சாம்பல் நிற அணில் வன உயிரினச்
சரணாலயம்,
திருவில்லிபுத்தூர், விருதுநகர் மாவட்டம்

**<u>மனுதாரர்</u>**

திரு. R. ராஜ்குமார்.
345, நடுத்தெரு, இராமசாமியாபுரம்,
கூமாபட்டி 626 133 வத்திராயிருப்பு
விருதுநகர் மாவட்டம்.

*JJ/PA 03.10.2019*